BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440



Bergen Tamilsk Avis - no.21 - October 2022 - தேன் தமிழிதழ் - மாத இதழ் - இல.21 ஐப்பசி - 2022

*வணக்கம்!*

*நோர்வே தொடர்பு ஊடகங்களில் பல மாதங்களாக உக்ரைன், ரசியா நாடுகளுக்குள்ளே நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் பற்றிய செய்திகளும், உரையாடல்களும் தான் அதிகம் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக நோர்வேயின் அரச ஊடகங்களிலே தொடர்ந்தும் உக்ரைன் நாட்டு நிலவரங்களே முழுநேர ஒலிபரப்பாகி வருகின்றன.*

*அந்நாட்டு மக்கள் பெரும் அழிவுகளுக்கும், அவலங்களுக்கும், பாதிப்புக்களுக்கும் உள்ளாகி உள்ளனர். உக்ரைன் நாட்டுக்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்கலாம், அந்நாட்டு மக்களுக்கு எவ்வாறு அனுசரணை கொடுக்கலாம், தொடர்ந்தும் எவ்வாறு உதவிபுரியலாம் என்பதிலேயே நோர்வே அரசும், ஊடகங்களும், தொண்டு நிறுவனங்களும் அதிக அக்கறையோடு செயல்பட்டு வருகின்றன. அந்நாடுகளுக்கிடையில் யுத்த நிறுத்தம் அல்லது சமாதான பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான நகர்வுகளை யாரும் முன்னெடுக்க முடியாத நிலை உள்ளது.*

*இந்நிலவரம் நோர்வே நாட்டினை மட்டுமல்ல முழு ஐரோப்பாவையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது. எப்போ யுத்தம் நிறுத்தப்படும்? எப்போ அமைதி வரும் என்ற கேள்விகளுக்கு அப்பால், இந்த யுத்த தொடரானது உலக யுத்தமாக உருமாறி விடுமோ என்ற அச்சம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. விரைவில் உலக நாடுகளின் அதிபர்கள் ஒன்று சேர்ந்து அங்கு அமைதியினை ஏற்படுத்த வேண்டிய முயற்சிகளை எடுத்தல் அவசியமாகும்.*

*இது ஐரோப்பிய நிலவரம். நமது சிறிலங்காவில் மிக நீண்ட காலமாக நடைபெற்று வந்த மண்மீட்புப் போராட்டம் முடிந்து விட்டது. ஆனால் எமது இளையோர் போதைப் பொருட்களுக்கு அடிமைகளாகி மிக மோசமான அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள் என தாய்நாட்டு செய்திகள் தருகின்றன.*
*உலகளாவிய ரீதியில் பல பெரிய நாடுகளில் தான் போதைப் பொருட்கள் அதிகம் பாவிக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் இன்று இவை உலகின் பொதுவான பிரச்சினை ஆகிவிட்டது. அதிலும் சிறிலங்காவில் அதிகம் போதை பொருள் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இதற்கு பாடசாலை மாணவர்கள், இளையோர், பெரியவர்கள் என அனைத்து தரப்பினரும் அடிமையாகி வருகின்றனர்.*

*முதல்தரமான மிகப் பெரிய பாடசாலைகளில் எல்லாம் மாணவர்கள் போதைப்பொருளை பாவித்துக் கொண்டு இருக்கிறார்கள். மாணவர்களுக்கும் பல வழிகளிலும் விற்பனை செய்கிறார்கள். அவர்களது எதிர்காலம் பாழாகி வருகின்றது.*

*சிறிலங்காவில் இரு மொழி பேசும் மக்கள் வாழ்கிறார்கள். இப்போதைப் பொருட்களுக்கு இரு இன மக்களும் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக தமிழ் பேசும் இளையவர்கள் போதைப்பொருட்களினை அதிகம் பாவிக்கிறார்கள். இதனால் குடும்ப வன்முறைகளும், சமூக வன்முறைகளும் அதிகரித்து விட்டன. நமது நாடு மிகவும் சீர்கேடான நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றது. இதனால் ஏராளமான குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன.*

*போதைப் பொருட்களின் பாதகமான விளைவுகளை சிந்தியாது ஏராளமான இளையோர் தமது வாழ்வை தொலைத்து விடுகிறார்கள். பலர் தம் உயிர்களையும் இழந்துள்ளனர். நமது நாட்டில் நடந்தேறிய நீண்டகால யுத்தம், சுனாமி, கொரோனா போன்ற அழிவுகளில் இருந்து தப்பிய சிறுவர்களும், இளைஞர்களும் இன்று போதை பொருட்களால் தமது வாழ்வை தாமே அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.*

போதைப் பொருட்களுக்கு அடிமையாகியவர்களுக்கு விழிப்புணர்வு, மாற்று வாழ்வு கட்டமைப்புக்கள் என பல தொண்டு நிறுவனங்கள் மிகவும் ஆர்வத்துடன் இயங்கிவருகின்றன. இருந்தாலும் யாரும் எதிர்பாரா அளவு போதைப் பொருட்களின் இறக்குமதியும், பாவனையும், வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன.

சிறிலங்காவில் மட்டுமல்ல தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் மேலை நாடுகளில் பிறந்து வளர்ந்துவரும் நமது இளையவர்களும் இதற்கு அடிமைகளாகி உள்ளார்கள். இதனால் நமது இளையவர்கள் மத்தியில் பல்வேறு வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே போகிறது. டிஜிட்டல் வன்முறைகளும் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் உளவியல் தாக்கங்களுக்கு பாதிப்புக்குள்ளாகி வதைபடுவோர் ஏராளம்.

போதைப் பொருளுக்கு அடிமையாகும் பிள்ளைகளின் பெற்றோர் அவதானமாக இருந்தால் மட்டுமே அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். நமது பிள்ளைகளின் நண்பர்கள் யார்? அவர்கள் ஓய்வு நேரத்தில் என்ன செய்கிறார்கள்? அவர்களுக்கு எவ்வாறான வழிகளில் பணம் கிடைக்கிறது? போன்ற விடயங்களையாவது அவதானித்துக் கொள்ளுதல் வேண்டும். பெற்றோரே உங்கள் பிள்ளைகள் மேல் நம்பிக்கை வையுங்கள், அதேவேளை கண்காணித்தும் கொள்ளுங்கள்.


Ansvarlig redaktør: Julius Antoni
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி - தொலைபேசி எண்: (47) 924 63 674







## புதிய புத்தகம் அறிமுகம்

"கடல் அட்டை வளர்ப்பும் யாழ் தீவக கடல்களின் அரசியலும், சூழலியலும்"

நூலாசிரியர்: ஏ.எம்.றியாஸ் அகமட்
(விரிவுரையாளர் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)







# நோபல் பரிசு: போருக்கா? சமாதானத்திற்கா?

*தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ*






*பரிசுகளுக்கான மதிப்பு பற்றிய மதிப்பீடுகள் தொடர்ச்சியாக மாறி வந்துள்ளன. பரிசுகள் ஏன் வழங்கப்படுகின்றன என்ற கேள்வி ஒருபுறம் பதில்களைத் தேடியபடி இருக்கையில் மறுபுறம் அது யாருக்கு வழங்கப்படுகின்றன என்பதைப் பொறுத்து பரிசின் நோக்கமும் போக்கும் விளங்கப்படுகின்றன.*

*அங்கீகாரத்துக்கான ஆவல் பரிசுகளின் பெறுமதியை உயர்த்துகின்றன. இது உள்ளூரில் வழங்கப்படும் பரிசுகள் தொட்டு உலகளாவிய பரிசுகள் வரை அனைத்துக்கும் பொருந்தும். சில பரிசுகள் வரலாற்றுக் காரணங்களால் முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் முதன்மையானது ஆண்டுதோறும் வழங்கப்படும் நோபல் பரிசுகள். இப் பரிசுகளை உருவாக்கியவர் சுவீடன் நாட்டைச் சேர்ந்த அல்∴பிரெட் நோபல். இவர் பல அறிவியல் கண்டுபிடிப்புக்களைச் செய்தவர். இவர் டைனமைற்றைக் கண்டுபிடித்ததன் மூலம் பெரும் பணக்காரரானார்.*

*வெடிபொருட்களதும் அவற்றுக்குரிய ஆயுதங்களினதும் உற்பத்தியும் செய்த இவரது பிரதான தொழிலாகப் போர்க்கருவி விற்பனை இருந்தது. 1888ம் ஆண்டு அவர் சாவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் தனது சொந்த மரண இரங்கற் செய்தியை அவர் பத்திரிகையில் வாசிக்க நேர்ந்தது. அவரது சகோதரரின் மரணத்தை தவறுதலாக இவருடையது எனக் கருதிய பிரெஞ்சுப் பத்திரிகையொன்று "மரண வியாபாரியின் மரணம்" என்ற தலைப்பில் இரங்கலொன்றை எழுதியிருந்தது. "இவ்வாறு தானா உலகம் என்னை நினைவுகூரும்?" என்ற கேள்வியை அந்த இரங்கற் செய்தி அவர் மனதில் எழுப்பியது. அதன் விளைவாக அவர் உருவாக்கியதே நோபெல் பரிசுகள். அவர் தனது உயிலில் மருத்துவம், இயற்பியல், வேதியல், இலக்கியம் ஆகிய துறைகளிற் பரிசுக்குரியோரை சுவீடன் தெரிவுசெய்ய வேண்டும் என்றும்" சமாதானப் பரிசுக்குரியவரை நோர்வே பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் தெரிவுசெய்ய வேண்டும் என்றும் கூறியிருந்தார். சுவீடன் ஆதிக்க நோக்குடைய நாடாக இருந்ததாலும் நோர்வே அணிசாரா நடுநிலை வெளியுறவுக் கொள்கையைக் கொண்டிருந்ததாலும் அரசியல் நெருக்குவாரங்களையும் சொந்த நலன்களையுங் கடந்து இச் சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டும் என நோபெல் விரும்பினார். 1901ம் ஆண்டிலிருந்து நோபல் பரிசு இந்த அடிப்படையில் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றது. ஏனைய நொபெல் பரிசுகள் சுவீடனில் வழங்கப்படுகையில் சமாதானப் பரிசை மட்டும் நோர்வேயில் உள்ள நொபெல் பரிசுக் குழு வழங்குகிறது. எனவே அமைதிக்கான நொபெல் பரிசுக் குழுவை நோர்வே பாராளுமன்றம் தெரிவுசெய்கிறது. அல்பிரெட் நோபலை கௌரவிக்கும் முகமாக பரிகளைத் தெரிவுசெய்யும் முறைக்கான செலவுட்பட சகல நிர்வாகச்*

*செலவுகளையும் சுவீடனின் மத்திய வங்கி ஏற்றுக்கொண்டது. இன்று உலகில் இயங்கிவரும் மிகப் பழைய மத்திய வங்கி இதுவென்பது குறிப்பிடத்தக்கது. 1968ம் ஆண்டு தனது நூறாவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் முகமாக பொருளாதாரத்துக்கான நோபெல் பரிசு அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.*

**நொபல் சமாதானப் பரிசும் இலக்கியப் பரிசும்**
**அரசியல் நோக்கங்களால் தீர்மானிக்கப் படுகின்றன.**

*முற்றிலும் தகுதி வாய்ந்தோராகத் தெரிகிற எவருக்கேன் அப்பரிசு இடையிடை கிடைத்திருந்தால் அது மற்ற நேரங்களில் வழங்கப்படுகின்ற பலவற்றைத் தகுதியுடையனவாகக் காட்டுவதற்காகவே. எனினும், குறிப்பிடத்தக்களவு உலக முக்கியம் பெற்றோரே இப்பரிசுகளைப் பெறுகின்றனர்.*

*இப்பரிசுகள் பற்றி வலியுறுத்த விரும்புவது அவை நடுநிலையான முடிவுகளின் படி கிடைப்பதில்லை என்பதையே. சமாதானத்திற்கான நோபல் பரிசு ஏனைய நோபல்பரிசுகளை விட உலகளாவிய ரீதியில் அதிக கவனம் பெறுகிறது. உலகின் மிகப்பெரிய கொலைகாரர்களான கென்றி கிஸிஞ்சர், அல் கோர், ஜிம்மி காட்டர் முதற்கொண்டு ஆபிரிக்க மக்களை மனிதர்களாகவே மதிக்காத அல்பேர்ட் சுவைச்சர் வரை சமாதானத்தோடு தொடர்பில்லாதவர்களுக்கும் இப்பரிசு காலகாலமாய் வழங்கப்பட்டு வந்துள்ளது. கடந்த ஒரு தசாப்தகாலத்தில் சமாதானத்திற்கான நோபல் பரிசு கேலிக்குரியதாய் மாறியிருக்கிறது. 2009இல் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு வழங்கப்பட்ட சமாதானத்துக்கான நோபெல் பரிசு கண்டனத்துக்குட்பட்டது. 2015ம் ஆண்டு துனிசியாவின் அமைதியை நிலைநாட்டியதற்காக நான்கு அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது. இன்று துனிசியா ஜனநாயகமறுப்பு நிறைந்த தேசமாயுள்ளது. 2016ம் ஆண்டு சமாதான உடன்படிக்கையை எட்டியதற்காக கொலம்பிய ஜனாதிபதிக்கு "மட்டும்" பரிசுவழங்கப்பட்டது.*

*உடன்படிக்கையை எட்டிய பார்க் போராளிக்குழுக்களின் பிரதிநிதிக்கு வழங்கப்படவில்லை. இந்த அமைதி உடன்படிக்கை சிலகாலமே நீடித்தது. 2019ம் ஆண்டு எரிட்ரியாவுடன் எல்லை உடன்பாட்டுக்கு வந்து சமாதானத்தை நிலைநாட்டியதற்காக எத்தியோப்பிய ஜனாதிபதி அபி அஹமட் அலிக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இன்று மிகப்பெரிய மனிதஉரிமை மறுப்பாளராகவும் இனப்படுகொலைக் குற்றவாளியாகவும் சர்வாதிகாரியாகவும் அபி அஹமட் அலி மாறியிருக்கிறார்.*

*இந்தப் பின்புலத்திலேயே 2022ம் ஆண்டுக்கான பரிசை நோக்க வேண்டியுள்ளது. இவ்வாண்டு "அமைதிக்கான நோபல் பரிசுக்கு 343 வேட்பாளர்கள் (251 தனிநபர்கள் மற்றும் 92 நிறுவனங்கள்) பரிந்துரைக்கப்பட்டார்கள். இவ்வாண்டுக்கான பரிசு பெலாரஸைச் சேர்ந்த மனித உரிமை வழக்கறிஞர் அலெஸ் பியாலியாட்ஸ்கி (Ales Bialiatski)" ரஷ்ய மனித உரிமைகள் அமைப்பான மெமோரியல் (Memorial) மற்றும் உக்ரேனிய மனித உரிமைகள் அமைப்பான சிவில் உரிமைகள் மையம் (Center for Civil Liberties) ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. உக்ரைனில் நடைபெறுகின்ற யுத்தமே இம்முறை பரிசைத் தீர்மானித்திருக்கிறது. ஆனால் நோபல் பரிசுக்கான பரிந்துரைகள் ஏற்கப்படும் இறுதித்திகதி ஜனவரி 31ம் திகதியாகும். உக்ரைனின் மீது ரஷ்யா போர்தொடுத்தது பெப்ரவரி மாதம் 24ம் திகதியே.*

*எனவே கடந்தகாலம் போலவே உண்மையான "சமாதானம்" என்பதைத் தாண்டி அரசியலே இந்தப் பரிசுக்குரியவரைத் தெரிவதில் செல்வாக்குச் செலுத்துகிறது. பரிசு அறிவிக்கப்பட்ட நிலையில் உக்ரைனிய அமைதி இயக்கத்தின் தலைவர் யூரி ஷெலியாசென்கோ இப்பரிசின் தெரிவு குறித்து ஒரு கடுமையான விமர்சனத்தை எழுதினார். அமெரிக்க வெளியுறவுத் துறை மற்றும் ஜனநாயகத்திற்கான தேசிய அறக்கட்டளை போன்ற சிக்கலான சர்வதேச நன்கொடையாளர்களின் நிகழ்ச்சி நிரல்களை சிவில் உரிமைகளுக்கான மையம் ஏற்றுக்கொண்டதாக குற்றம் சாட்டினார். அவர் பின்வருமாறு எழுதுகிறார்:*
*"ஜனநாயகத்திற்கான தேசிய அறக்கட்டளை உக்ரைனுக்கான நேட்டோ உறுப்பினர்களை*

ஆதரிக்கிறது. ரஷ்யாவுடன் எந்த பேச்சுவார்த்தையும் சாத்தியமில்லை என்று வலியுறுத்துகிறது. மற்றும் சமரசம் செய்ய விரும்புபவர்களை அவமானப்படுத்துகிறது. மேற்குலகம் ஒரு ஆபத்தான பறக்கக் கூடாத மண்டலத்தை விதிக்க விரும்புகிறது. இவர்கள் எல்லோரும் புட்டின் மட்டுமே உக்ரைனில் மனித உரிமைகளை மீறுகிறார் என்று கூறுகிறார்கள். ரஷ்ய சார்பு ஊடகங்கள், கட்சிகள் மற்றும் பொது நபர்களை ஒடுக்குவதற்காக உக்ரேனிய அரசாங்கத்தை ஒருபோதும் விமர்சிப்பதில்லை.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்காக உக்ரேனிய இராணுவத்தை ஒருபோதும் விமர்சிப்பதில்லை.

பரிசை வென்ற சிவில் உரிமைகள் மையமானது சர்வதேச சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைக்காக நிற்க மறுத்துள்ளதோடு இராணுவ சேவைக்கு மறுப்பு தெரிவிக்கத் தவறியது. ரஷ்யாவுடனான போரில் முற்றிலும் ஒன்றுபட்ட நாடாக மேற்கத்திய ஊடகங்களில் சித்தரிக்கப்பட்ட உக்ரைனுக்குள் கூட, போரிட விரும்பாத மனிதர்கள் இருப்பதாக ஷெலியாசென்கோ சுட்டிக்காட்டுகிறார். உக்ரைன் 2019 முதல் அதன் குடிமக்களை போரில் பங்கேற்க கட்டாயப்படுத்தியது. ரஷ்யா படையெடுத்தபோது, உக்ரைன் தனது குடிமக்களின் ஜனநாயக சிவில் உரிமைகளை இடைநிறுத்தியது. 18 முதல் 60 வயதுக்குட்பட்ட ஆண்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடை செய்தது. இவை எதுகுறித்தும் கருத்தோ கண்டனமோ தெரிவிக்காத மேற்குலக நலன்களுக்காகப் பணியாற்றும் ஒரு அமைப்புக்கே சமாதானத்திற்கான பரிசு வழங்கப்பட்டுள்ளது.



அமைதிக்கான நோபல் பரிசை ரஷ்ய, உக்ரேனிய மற்றும் பெலாரஷ்ய போர் எதிர்ப்பாளர்கள் மற்றும் சமாதானத்தை உருவாக்குபவர்களுக்கு ஆதரவான அமைப்புகளுக்கு வழங்கி இருந்திருந்தால், போருக்கெதிரான நிலைப்பாட்டை எடுக்கும் தைரியமான இளைஞர்கள் மீது உலகளாவிய கவனத்தை ஈர்த்திருக்கும். அமெரிக்கா எப்படி உக்ரைனுக்கு முடிவில்லா ஆயுதங்களை வழங்குகிறது, ஆனால் மிகவும் ஆபத்தான போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுக்காமல், ஜனாதிபதி பிடன் “அணு ஆயுத யுத்தம்” பற்றி எச்சரிப்பது பற்றிய மிகவும் தேவையான உரையாடலையும் இது தொடங்கியிருக்கும். இது “நாடுகளுக்கிடையே கூட்டுறவை முன்னெடுத்துச் செல்வதற்கும், நிலைநிறுத்தப்பட்ட படைகளை ஒழித்தல் அல்லது குறைப்பதற்கும் அதிகம் அல்லது சிறந்ததைச் செய்தவர்களுக்கு, உலகளாவிய அங்கீகாரத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற ஆல்ஃபிரட் நோபலின் விருப்பத்திற்கு ஏற்ப அது நிச்சயமாகவே இருந்திருக்கும். ஆனால் இப்போது தன் கல்லறையில் அவர் திரும்பிப் படுக்கிறார்.

இப்பரிசு வழங்கப்படுவது போருக்கா சமாதானத்திற்கா என்ற வினாவோடு.

# தலைவா! நீங்க நல்லவரா கெட்டவரா?




ரிஷி சூனாக் பிரித்தானிய பிரதமராக வந்திருக்கிறார்.
ஆசியர் ஒருவர் பிரதமராக வந்துவிட்டார்.
அவர் தமிழரின் நண்பர் என்றெல்லாம் பல விதந்துரைகள்.

ரிஷி சூனாக் ஆசியராக இருப்பதென்பதல்ல முக்கியத்துவம்.
அவரது பின்னணி, அரசியல் பார்வை என்பதே இங்கு அலசப்படவேண்டியவை.

ரிஷி சூனாக் ஒரு கன்சர்வெட்டிவ். பெரும் பணக்காரர்களில் ஒருவர்.
இஸ்ரேலிய ஆதரவாளர். உதாரணத்துக்கு பிரித்தி பட்டேல் என்ற ஆசிய பிரித்தானிய அமைச்சர் தான் அகதிகளை ருவண்டாவுக்கு அனுப்பும் கொள்கையை முன்வைத்தவர். அவருக்கும் ரிஷிக்கும் கொள்கையளவில் மாற்றம் இல்லை. ஒரே கிளப்.
பொருளாதார நெருக்கடியில் சிக்கி உள்ள பிரித்தானியாவை மீட்டெடுக்க ரிஷி சூனாக் முதலாளிகளின் பக்கமே நிற்பார். ஏற்கனவே இலவச சுகாதாரத்துறை மிக மோசமான நிலையில் உள்ளது.

வறுமைக்கோட்டில் உள்ளவர்களுக்கான உதவித்தொகை குறைக்கப்பட்டிருக்கின்றது.
ரிஷி சூனாக் பெரும் முதலாளி மட்டுமல்ல கன்சர்வேட்டிவ் கொள்கைகளில் ஊறியவர். வறிய மக்கள் பற்றிய அக்கறை அவருக்கு கிடையாது.
பொருளாதாரத்தை மீட்டெடுக்க வறிய மக்களை மேலும் ஒறுக்கச்சொல்லும் சட்டங்களை அவர் கொண்டு வருவார். அத்துடன் அவர் ஒரு இந்துவாக தன்னை அடையாளப்படுத்துபவர். அவ்வகையில் வெளி நாடுகளில் இருக்கும் இந்துத்துவ சக்திகளுக்கு ஒரு உற்சாக பானமாகவும் விளங்குவார். இஸ்லாமிய வெறுப்பை மேலும் வளர்க்க அவரது இந்து இந்திய அடையாளம் பயன்படும்.




**யூலியஸ் அன்ரனி**

*(படங்கள்: அ. லக்ஸ்மன்)*

**பே**ர்கன் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தனது 20ம் ஆண்டு நிறைவினை மிகப்பெரு விழாவாக ஒக்டோபர் 16ம் நாள் பேர்கன் Åsane கலாச்சார மண்டபத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடியது.

அக வணக்கத்தோடு ஆரம்பமாகிய விழாவிலே பேர்கன் மாநகரின் உதவி மேயர் Natalia Antonia மற்றும் வலதுசாரிக் கட்சியின்



முக்கிய உறுப்பினர் Christin Meyer ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

பாடசாலை அதிபர் திரு. வேலாயுதபிள்ளை தயாளன் அவர்கள் பாடசாலையின் தோற்றம், செயற்பாடுகள், மாணவர்களின் கல்வி முன்னேற்றம், நோர்வே சமூகத்துடனான ஒருமைப்பாடு, ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் அற்பணிப்பு போன்ற பல முக்கிய விடயங்களை பகிர்ந்து சிறந்ததொரு உரை நிகழ்த்தினார்.

அத்துடன் சிறப்பு விருந்தினர்களான Natalia Antonia மற்றும் Christin Meyer அவர்களே பாடசாலையின் சார்பில் ஆசிரியர்கள் மற்றும் தொண்டர்களை மதிப்பளித்து கௌரவித்தனர்.

பாலர் பிரிவு முதல் உயர்தர வகுப்பு மாணவர்கள் வரை வகுப்பு ரீதியாக இசை, நடனம், நாடகம், பட்டிமன்றம் என பல்வேறு கலை நிகழ்ச்சிகளை வழங்கினர். பாலகர்களின் கலை நிகழ்ச்சிகள் மக்களை மிகவும் கவர்ந்தன எனலாம்.

75 மாணவர்களுடன் 2002ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பேர்கன் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடமானது இன்று கிட்டத்தட்ட 200 மாணவர்களையும் ஐம்பது ஆசிரியர்களையும் உள்ளடக்கி பெரும் பணியை பேர்கன் மண்ணில் சிறப்பாக ஆற்றி வருகின்றது.

கல்வி, கலை, விளையாட்டு போன்ற முக்கியத் துறைகளில் கலைக்கூடம் அக்கறையோடு செயற்பட்டு வருகின்றது.
பேர்கன் மாநகரில் உள்ள சகல அரசியல் கட்சிகளும் இப்பாடசாலையின் தேவை அறிந்து ஒருமித்த குரலோடு தமது உதவிகளை புரிந்து வருகின்றனர்.

கடந்த 20வருட பாடசாலை பயணத்தில் கிட்டத்தட்ட 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது கல்வியை சிறப்பாக முடித்துக்



கொண்டு சமூகத்தில் நல்ல தொழில் துறைகளிலும் பணியாற்றிவருகின்றனர். அத்துடன் நமது இளையோர் இந்த சமூகத்தில் மிகச்சிறந்த பண்பாளர்களாகவும் நிமிர்ந்து நிற்கிறார்கள். ஆயினும் அவர்களுள் யாரும் இப்பாடசாலையில் நிரந்தர ஆசிரியர்களாகவோ அல்லது பொறுப்பாளர்களாக பதியப்படவில்லை. நமது இளையோர் யாரும் பாடசாலையில் சிரத்தையோடு பணியாற்ற முன்வராதமை தமக்கு வேதனை தருவதாகவும், அவர்கள் தமது பணிகளை பொறுப்பேற்றால் மட்டுமே இப்பாடசாலை தொடர்ந்தும் சிறப்பாக இயங்கும் என்ற கருத்தினையும் அதிபர் திரு.வே.தயாளன் அவர்கள் பேச்சிலும், எழுத்திலும் பதித்தமை குறிப்பிடத்தக்கது.

ஐந்து மணித்தியாலங்களுக்கும் மேல் நடைபெற்ற நிகழ்வில் சிறுவர், இளையோர்,



பெற்றோர், பெரியோர், சமூக ஆர்வலர்கள் என ஏராளமான மக்கள் அரங்கை நிறைத்திருந்தனர். கலைக்கூடத்தின் கல்விச்சேவைப் பயணம் இனிதே தொடர எமது வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றோம்.



# இலங்கையில் வடக்கில் போதைப்பொருட்கள் பாவனையும் அதிகரிக்கும் சமூகசீர்கேடுகளும்

-ப்ரியமதா பயஸ்-

இலங்கையின் வடக்குப்பகுதியில் அதிகரித்துள்ள போதைப்பொருள் விற்பனைஅதிகளவானோரை போதை பாவனைக்கு அடிமையாக்கி உள்ளது.

கட்டுப்பாடுகளற்ற போதைபொருள் வரவு, பயமற்ற விற்பனை என்பன இளைஞர்களையும், சிறுவர்களையும் போதைக்கு அடிமையாக்கி பெரும் இடர்பாடுகளை சமூகத்துக்குள் விதைத்துள்ளது. இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் போதைப்பொருள் பாவனையில் இருந்தாலும் வடக்கு பகுதியில் திட்டமிட்ட வகையிலான வகைதொகை அற்ற பாவனை பெரும் பரபரப்பையும் பாதிப்பையும் கொண்டுவந்துள்ளது.

கடந்தவருடம் மிதமாக இருந்த போதைப்பொருள் விற்பனை இந்தவருடம் நடுப்பகுதியில் அபரிமிதமான பாவனையாளர்களை உருவாக்கி, சமூகத்துக்குள் பெரும் இடர்பாடுகளையும், வகைதொகையற்ற இறப்புக்களையும், அபரிமிதமான தொற்று நோய்களையும், சமூக பிறழ்வுகளையும், கொலைகளையும், கொள்ளைகளையும் ஏற்படுத்தி ஊழித்தாண்டவம் ஆடுகின்றது.
நாளொன்றுக்கு பத்துபேர் வீதம் போதைக்கு அடிமையாக்கிக்கொண்டு இருக்கின்றனர். கடந்த மூன்று மாதத்தில் மட்டும் பத்துக்கும் மேற்பட்டோர் போதைப்பொருள் பாவனையால் மரணித்துள்ளனர்.

கஞ்சா, அபின் போன்ற போதைப்பொருள்களை தாண்டி மிக ஆப்பத்தான ஹெரோயின் என்ற உயிர் கொல்லிப் போதைப்பொருள் இலங்கையின் வடக்கில் அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றது. கடல்வழியாக இந்த போதைப்பொருள் இலங்கையின் வடக்கு பகுதிக்குள் வருவது கண்டுபிடிக்கப்பட்டாலும், அதைத் தடுக்கும் செயற்பாடுகள் மந்தகதியில் இடம்பெறுவதே இந்த வருகைக்கும் விற்பனைக்கும் பாவனைக்கும் வழிவகுத்துள்ளது எனலாம்.

கட்டுப்பாடற்ற வாழ்வியல்தன்மை, எப்போதும் புழக்கத்தில் உள்ள பணம் என்பன இதன் விரைவான விற்பனையினை அதிகரிப்பதோடு இதற்கு அடிமையாகுபவர்களையும் அதிகரிக்கச் செய்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு பணப்புழக்கம் அதிகளவில் உள்ளதால் இந்த போதையை வாங்கி பயன்படுத்துபவர்களின் தொகையும் அதிகரிக்கின்றது. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவர் வெளிநாடுகளில் இருப்பதால் யாழ்பாணத்து இளைஞர்கள் மிக எளிதாக போதைக்கு அடிமையாகிப்போகின்றனர். குடும்ப செலவுகளுக்கு வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணம் இங்கே போதைப்பொருள் பாவனைக்கு ஊக்கியாக இருக்கின்றது என சமூக ஆர்வலர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதனைவிட போரின் மூலம் அதிகரித்துள்ள பெண்தலைமைத்துவ குடும்பங்களில் இருக்கும் ஆண்பிள்ளைகள் தாய்மாரை மிக இலகுவாக ஏமாற்றி, பணத்தைப் பெற்று போதைப்பொருட் பாவனைக்கு அடிமையாகிப் போகின்றனர். மிகக் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டிய ஒரு சமூகமாக இலங்கையில் இளையசமூகம் மாறி விட்டிருக்கின்றது.

பெற்றோர், பாதுகாவலர் என்போரைத்தாண்டி போதை விற்பனையாளர்களின் மாயைப்பேச்சில் இளைஞர்கள் விழுந்துபோவது அவர்களின் சுய அறிவின்மேல் ஐயத்தை ஏற்படுத்துகின்றது.

ஆயிரக்கணக்கானோர் போதை பாவனையாளராக மாறி, இப்போது நூற்றுக்கணக்கானோர் போதையால் மரணித்துப்போக மீதிப்பேர் மருத்துவமனைகளிலும் சிறைகளிலும் வாடும் அவலம் ஏற்பட்டுவிட்டது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கான சிகிச்சை கிளினிக் ஆரம்பிக்கும் அளவுக்கு நிலைமை கைமீறிப் போய் இருக்கின்றது.

நாளாந்தம் பத்திரிகைகளை எடுத்தால் முழுவதும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் சம்பவங்களே நிறைந்துபோய் இருக்கின்றன. போதைப்பொருட்களின் பாவனையால் இளைஞர் மரணம், போதைப்பொருளுடன் பத்துபேர் கைது, போதைப்பொருள் பாவித்துக் கொண்டிருந்த நிலையில் இளைஞர்கள் கைது, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதை பாவனையாளர், போதையில் தாயை பாலியல் தொந்தரவு செய்த மகன், போதைப்பொருளை பாவித்துவிட்டு சகோதரியை பாலியல் பலாத்காரம் செய்த சகோதரன், போதைப்பொருள் பாவனை செய்த கணவனால் மனைவி கொடுமைப் படுத்தல், கணவனின் கொடுமை தாங்காது மனைவி தற்கொலை, தாய் தற்கொலை என சமூகப் பிறழ்வுச் செய்திகள் தினமும் பத்திரிகைகளில் வரத் தவறுவதேயில்லை.

இதனைக்கொண்டு பார்க்கும்போது நாளாந்தம் போதைப்பொருளால் இந்த மாகாணம் நாசமாக்கிக்கொண்டு போவதை இனம்காண முடிகிறது. இதைவிட ஊசிமூலம் போதையை ஏற்றிக்கொள்பவர்களால் அதிகரிக்கும் நோய் அவலங்கள் சொல்லிமாளாது. குறிப்பாக எயிட்ஸ் நோய் பாதிப்பு இப்போது அதிகரித்துள்ளது.

பாதுகாப்பற்ற முறையில் ஊசிமூலம் அனைவரும் போதைப்பொருளை உடலில் செலுத்துவதால் எயிட்ஸ் நோய் மிக அதிகளவில் பரவுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் ஒவ்வொரு வீட்டிலும் ஒருவரோ இருவரோ போதைக்கு அடிமையாகி வாழ்க்கையை தொலைக்கின்றனர். கொரோனா வைரஸ் பரவலின்போது சமூக பொதுமுடக்கத்தின்போது குறைந்து காணப்பட்ட போதைபொருட் பாவனை கடந்த ஆறுமாத காலங்களில் மிகப்பெரும் உச்சத்தை அடைந்துள்ளது. தற்போது பல குறைந்த வயது மரணங்களை ஏற்படுத்தும் கடும் நிலையை எட்டியுள்ளது.

போதைப்பொருளை இடைவிடாது பாவிப்பவர்கள் ஆறுமாதத்தில் மரணத்தின் நிலைக்குப்போவது தெரியவந்துள்ளது, இந்த வருட ஆரம்பத்தில் வகைதொகை அற்று போதையை பயன்படுத்தியவர்கள் தற்போது எந்த காரணமும் தெரியாமல் இறப்பதுபோல் திடீர் திடீர் என மரணிக்கின்றனர். மருத்துவ பரிசோதனைகளின் மூலம் அவர்கள் போதைக்கு அடிமையாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடருமாகவிருந்தால் நலிவான ஒரு சமூகத்தை நாம் இன்னமும் ஒரு வருடத்தில் வடக்கில் ஏற்படுத்தி இருப்போம் என்பது முற்றிலும் உண்மை, இந்த நிலைமையை தொடரவிடாமல் சட்டங்களை கடுமையாக்கி தண்டனைகளை இறுக்கமாக்கி போதைப்பொருள்களின் விற்பனையை கட்டுப்படுத்தாமல் விட்டால் நிலைமை சொல்லிமாளாது.

அரச நிறுவனம் கண்டும் காணாததுபோல் இருப்பது திட்டமிட்ட சதி போல் சமூக ஆர்வலர்கள் உணர்கின்றனர். அரசாங்கம் இதனை முற்றாக தடைசெய்யாதுவிட்டால் இந்த நிலைமை இலங்கை முழுவதையும் ஆக்கிரமிக்க நீண்டநாள் எடுக்காது என்பதும் உண்மையான கருத்து.

எனவே ஒவ்வொரு மனிதனையும் சுய சிந்தனையோடு இயங்கச் செய்யும் பொறுப்பு இந்த சமூகத்தையே சாரும் ஒவ்வொருவரும் தன்னிச்சையாக செயற்படாது ஒற்றுமையுடன் இணைந்து போதை ஒழிப்புக்காக பாடுபடுவது இன்றியமையாததாகி உள்ளது. □

# நோர்வேயைக் குறி பார்க்கும் ரஷ்ய உக்ரைன் யுத்தமேகம்

## இன்று நடைபெற்று வரும் யுத்தமானது நோர்வேயிலும் பெரும் நெருக்கடிகளையும், சவால்களையும் ஏற்படுத்தலாம் என அரசியல் அவதானிகள் எண்ணுகின்றனர்.

*கடந்த 28.10.2022ம் நாளன்று பேர்கன் நகராட்சியின் அவசரகால பாதுகாப்பு பொறுப்பாளர் Rune Bratland முக்கிய தகவலினை வெளியிட்டுள்ளார்.*

*இயற்கை அனர்த்தங்கள், நாசவேலைகள், தொழில்நுட்பச் சிக்கல்கள் அல்லது யுத்தங்களால் பலர் மின்சாரம் அல்லது தண்ணீரை இழக்க நேரிடலாம், அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவது மிகவும் கடினமாகலாம். ஒவ்வொருவரும் தங்கள் சொந்த நலனுக்காக பொறுப்பேற்கவேண்டும். எதிர்பாராத ஒன்று நடந்து விட்டால் அதனை சந்திப்பதற்கு தயாராக இருக்கவேண்டும். உக்ரைனில் நடைபெறும் போர் மற்றும் மின் நெருக்கடியானது சுய தயாரிப்புக்கான அவசியத்தை உணர்த்தியுள்ளது.*

*குறைந்தபட்சம் 72 மணிநேரம் மின்சாரம், இணையம், தண்ணீர், உணவு மற்றும் மருந்து வசதி இல்லாமல் சமாளிக்க நீங்கள் தயாராக இருந்தால் தான் நாங்கள் ஒரு சமூகமாக சிறப்பாக வாழ தயாராக இருக்கிறோம் எனக் கொள்ளலாம்.*

*அக்டோபர் 31 தொடக்கம் நவம்பர் 6 வரை நாடு முழுவதும் சுய தயாரிப்பு வாரம்.*

*சில நாட்களுக்கு நமக்கு அவசியமாய் தேவையானவை திடீரென்று கிடைக்காமல் போனால், உங்களை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பதைப் பற்றி உங்கள் அன்புக்குரியவர்களிடம் பேசுவதற்கான வாய்ப்பை பயன்படுத்துங்கள்.*

*முடிந்தவரை உங்களையும் உங்கள் அன்புக்குரியவர்களையும் கவனித்துக்கொள்ள முடிந்தால், உதவி அவசியம் தேவைப்படுகிறவர்களுக்கு உதவுவதில் நகராட்சி கவனம் செலுத்தமுடியும்.*

*உலர் உணவு, மெழுகுவர்த்திகள், மின்கலன்கள், தீப்பெட்டிகள், விறகு, தண்ணீர் மற்றும் கேஸ் கிரில் ஆகியவை எதிர்பாராத நீர் அல்லது மின்சார இழப்பைச் சமாளிக்கும் எளிய பொருட்களாகும்.*




Dr.விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist,
Oslo, Norway)

எனக்கு அநேகமாக ஒவ்வொரு ஆண்டும் Influensa நோய் வருவதுண்டு. நான் கவனமாக இருந்தாலும் ஏதோ வகையில் இந்த நோய் தொற்றி விடுகிறது. இந்த Influensa என்றால் என்ன?

Influensa என்பது வைரசினால் ஏற்படுகின்ற ஒரு தொற்றுநோயாகும். மேலைத் தேசங்களில் குளிர்காலத்தில் பரவுவது வழமை (கார்த்திகை மாதம் முதல் - சித்திரை மாதம் வரை). வைரசு தொற்று ஏற்பட்டு நோய்க்குரிய அறிகுறிகள் தோன்றுவதற்கு எடுக்கும் காலம் (நோயரும்பு காலம்) 2 நாட்களாகும். காய்ச்சல், தொண்டைநோ, வரட்டுஇருமல், உடல் வலி, தலையிடி என்பன அறிகுறிகளாகும்.

இது ஆபத்தானதா?

வயோதிபர்கள், கர்ப்பணிப்பெண்கள், நோயெதிர்ப்புச்சக்தி குறைந்தவர்கள், இருதயநோய் - நுரையீரல் நோய், நீரிழிவு நோய் போன்ற நோயுள்ளவர்களுக்கு Influensa நோய் ஏற்படுவது ஆபத்தானதாகவே கருதப்படுகின்றது. காரணம் வைரசினால் ஏற்படும் நோய் பக்றீரியாக்கள் தொற்றிக்கொள்ள வழிசமைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதால் மேற்குறிப்பட்டவர்கள் கடுமையாக பாதிக்கப்பட சாத்தியமுள்ளது.

இதற்கான மருந்துகள் இருக்கின்றதா?

Influensa வைரசை அழிப்பதற்கான மருந்துகள் எதுவும் இல்லை. ஆனால் காய்ச்சல், உடல்நோ, இருமல் போன்றவற்றிற்கு மருந்தெடுத்தல் அதிக நீராகாரங்களை உட்கொள்ளல், ஓய்வெடுத்தல் என்பன அவசியம்.

Influensa vaksin போடுவதால் ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்றப்படுமா?

நாம் இப்போது தான் ஒரு பெருந்தொற்றைக் கடந்து தடுப்பூசிகளை ஏற்றிய அனுபவம் நிறைந்தவர்களாக இருக்கின்றோம். இந்தத் தடுப்பூசியும் கொரோனா தடுப்பூசியைப் போன்றே சிலருக்கு சில பக்கவிளைவுகள் ஏற்படலாம். ஆனாலும் தடுப்பூசியால் கிடைக்கும் பலன் அதிகமென்றே கருதப்படுகின்றது.

# தாவீதுத்திறவு

-தமயந்தி.



தொடர்- பாகம் 4

எல்லா வெட்கப்பாடுகளையும் அள்ளி, இலையினோரத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு அண்ணாவியாரைக் கேட்டேன்.

“ஐயா, சில கேள்விகள் கேட்கலாமா ஐயா.... நீங்கள் சொல்லுற சிலசில சொல்லுகள் எனக்குப் பிடிபடேல்ல, அதப்பற்றிக் கொஞ்சம் விளங்கப்படுத்த ஏலுமோ ஐயா?”

“ஓமோம், சங்கடப்படாமல்க் கேளுங்க தம்பி”

“ஐயா, அந்த... பாமரத்தோட கட்டிறது, மணச்சோறு, திறவு எண்டால்... கொஞ்சம் விளங்கப் படுத்த ஏலுமோய்யா?”

”ஓம் தம்பி, அதென்னண்டால் ராசா..., தொழில்ல கட்டிறது எண்டால், அரைப்பங்கு வாங்கிற இளம்பொடியள் தரவளியள் தொழில்ல வளந்து கெட்டித்தனமா வந்திட்டாங்களெண்டு கண்டால், தொழில் செய்து கொண்டிருக்கும்போதே தாய்வள்ளத்தின்ர அணியக்கயித்தால பாமரத்தோட பிடிச்சுக் கட்டியிருவாங்கள். பிறகிட்டு அந்தப் பொடியன மாமனோ, மச்சானோ பொறுப்பு நிண்டு அவிழ்க்கவேணும். செலவுக்கு தான் பொறுப்பு எண்டும் நிக்கவேணும். அடுத்தாப்போல.... மறுநாளோ, இல்லாட்டி மற்றக் கிழமயோ எல்லாத் தொழிலாளியளுக்கும் விருந்துச்சோறு சமைச்சுக் கடலுக்குக் குடுத்துவிடுவினம் அந்தப் பொடியன்ர புள்ளகுட்டியள். கொஞ்சம் வசதியுள்ளவயள் ஊருக்கெல்லாம் சொல்லியும் விருந்து குடுப்பினம். அவயவயின்ர வீக்க தூக்கத்துக்குத் தக்கமாதிரி. விருந்து வைக்கிறண்டு தொழில்ல வாற பருமனுகள்ள சிலத செலவுகளச் சமாளிக்கவெண்டு அண்ணாவியார் செலவுகாறப் பெடியனுக்கு கட்டாயமாகக் குடுத்தனுப்புவார். அதிலயிருக்கிற அமுசடக்கம் என்னண்டாலப்பன்..., பொடியன் இளந்தாரியா வந்திட்டான் எண்ட கணக்கா எண்டு வச்சுக் கொள்ளுங்கோவன்”

“ஐயா, தமிழ் ஒரு மிகப் பழமையான, பாரம்பரியமான மொழி. அப்பிடியிருந்தும் தமிழ் நாடகங்கள் எண்டு உலகத்தரத்தில சொல்லிக் கொள்ளுற மாதிரி நல்ல நாடகங்களோ, இல்லாட்டி.... நாடகாசிரியர்மார் எண்டு சொல்லிக் கொள்ளுற மாதிரியான ஆட்களோ ஏன் இன்னும் எங்களிட்ட இல்ல எண்டு சில கலாநிதிமார் கவலப் படுகினமே ஐயா....?”

“ஓம். இல்லத்தான் தம்பி. அவயள் அப்பிடித்தான் சொல்லுவினம், அப்பிடி மெத்தத்தான் வியாகுலப் படுவினம். இதெல்லாம் ஆத்தில போட்டிட்டுக் குளத்தில தேடுற கதைகள் தம்பி. எங்கெல்லாம் போய்த் தேடினவயாம்? கலயளுக்குஞ் சாதிசொல்லி ஒதுக்கிவச்ச கசவனுகள் தம்பி இவனுகள். இப்ப தங்கட லாபங்களுக்காக குண்டியில குதிக்காலிடிக்க ஓடுப்பட்டுத் திரியுறானுகள். என்ர சின்ன வயசுக் காலத்திலயே எத்தின கூத்துகள்....? எல்லாம் ரெண்டு ரெண்டு ராக்கூத்துகளும், மூணுமூணு சரித்திரக்காறரும் எண்டு பாடின கூத்துகள்.

*இப்பிடி ஆயிரக்கணக்கான நாடகங்கள் எங்களட்ட இருந்தது தம்பி...., இந்தக் கூத்துகளின்ர கவுத்துவமும், பேரின்பரசமும், கனிவும், கதயலங்காரமும் இண்டைக்கொருத்தரால நினைச்சுப் பாக்கேலுமா? இண்டைக்கு வந்து நெஞ்சு வலிக்க, நொந்தலப்பட்டுக் கதைக்கிறவைக்கு இந்தக் கூத்துகளின்ர பேர் ஊர் ஏதாவது தெரியுமோ எண்டு கேட்டுப்பாரும் அவயளட்ட ராசா. ஏன் அவ்வளவுதூரம் போறியளப்பன்.... ம், எங்களிண்ட மூத்தகுடியள் கட்டிவச்ச ஒவ்வொரு அம்பாவுமே ஒவ்வொரு கத சொல்லுமே மோனே. மனிசர் உசிர் வாழுற காலத்தைய எட்டு ரசங்களுக்க கட்டுப்பட்டு நிக்கும் எங்கட கூத்து. கடசிமூச்சக் கைவிட்டபிறகு சவக்கட்டைக்கு வாற சாந்தரசத்த சாபமெண்ட நினைப்போ, பாவமெண்ட நினைப்போ முன்னத்தய நாடகங்கள் நாடுறதில்ல. காரணம் தம்பி.... வாழ்ந்து மகிழ்ந்து கண்டனுபவிச்சதத்தான் பாடினானுகள் எங்கட பாட்டன் பூட்டன். தாங்கள் கண்டறியாத சாவ எழுதிற திறவ அவங்கள் தொட்டும் பாக்கேல்ல. நான் இளந்தாரியா இருந்த காலத்தில எங்கட அண்ணாவியாற்ற ஒரு கூத்துக்கொப்பி கடசிப்பக்கத்தில எழுதி வச்சதப் படிச்சது இப்பவும் நினைவிருக்கு. அதெப்பிடியெண்டால் தம்பி...*

*"சாந்தம் என் றிருப்போராலும்*
*சவக்கட்டை ஆனோராலும்*
*சனசமூகம் தான் துலங்க*
*ஆகுதலேதும் இல்லையடி*
*அன்னமே என் சலோமை*
*உண்மையிதை நீ அறிவாய்"*
*அண்ணாவியார் சற்றுக் கோபமானதை அவதானிக்க முடிந்தது. இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாதோ என்றும் தோன்றியது. சில காலத்துக்குமுன்னால் ஐரோப்பாவில் நிகழ்ந்த ஒரு இலக்கியக் கூட்டத்தில் "ஷேக்ஸ்பியர் போன்ற நாடகாசிரியர்மார் எங்களிடம் ஏன் உருவாகவில்லை" என்ற வாதங்கள் நடந்தபோது ஒரு கவிஞன் சொன்னான் "யாழ்ப்பாணத்துச் சாதியச் சட்டாம்பிமாரின்ர கையில ஆப்பிட்டிருந்தால் ஷேக்ஸ்பியரையும் தலையெடுக்க விடாமல் ஓரங்கட்டியிருப்பாங்கள்" என்று.*

*"ஐயா, இன்னொரு அபிப்பிராயம் சொல்லுப்படுகுது, அதப்பற்றி உங்கட கருத்தயும் ஒருக்காச் சொன்னா நல்லாயிருக்கும்"*

*"கேளுங்க தம்பி"*

*"இந்த அண்ணாவி மரபு இப்ப தேவையில்லாதது. அவயளட்ட இருந்துதான் முதல்ல இந்தக் கூத்துக்கலய மீட்டெடுக்க வேண்டியிருக்கு...., அண்ணாவிமாருக்குள்ளயே இழுபறியள் கிடக்கு, என்ர கூத்துத்தான் பெரிசு, இல்ல என்ர கூத்துத்தான் பெரிசு எண்டு அடி படுவினம். அண்ணாவிமார ஒண்டடியாக் கூட்டிக் கதைக்கலாமெண்டால் அவயளுக்குள்ளயே ஒத்துவராகினம். நாங்கள்தான் எங்களின்ர தொன்மை மரபுகள மீட்டெடுக்கவேணும். இப்பிடியெல்லாம் சில அபிப்பிராயங்கள் சொல்லுப்படுகுதையா, இதப்பற்றி......."*

*இதைச் சொல்லி முடிப்பதற்குள் அண்ணாவியார் அடக்கமாட்டாமல் பெருங்குரலெடுத்துச் சிரித்தார். நான் கண்ட அன்றையகால மேடையில் எதிரியான துருக்கி மன்னனைப் பார்த்து அந்தக் கூத்துக்களரியே அதிரும்படியாக எம்பரதோர் ராசாவாக இவர் பெருங்குரலெடுத்து ஏளனமாய்ச் சிரித்த சிரிப்பொலியை இப்போ மீண்டும் காணக் கண்டேன் என்பதுதான் உண்மை.*

தொடரும்.....

# முகமட்'இன் மூன்று குறிப்புகள்

MOHAMED ALI YASEER ARAFATH



*குறிப்பு:1*

## மைத்துப் போக 450 ஆண்டுகள்



*கொரோனா காரணமாக அனைவருக்கும் முகக்கவசம் அணிவது கட்டாயம் ஆக்கப்பட்டது எனினும் அது தற்போதைய நிலையில் உலகில் மிகவும் மோசமான சூழல் மாசுபாடு நிகழ்த்துகிறது. ஒரு காலத்தில் சுகாதார கட்டமைப்பு மாத்திரம் பயன்பாட்டில் இருந்த முகக்கவசம் கொரோனா காரணமாக சூழலுக்கு வந்து சேரும் Face mask இன் அளவு 12000 சதவீதம் அதிகரித்துள்ளது. இதை ஆங்கிலத்தில் Astronomical increase என்பார்கள். மேலும் ஒரு முக்கியமான விடயம் முகக்கவசம் இயற்கையான சிதைவு (decomposition) கொள்ள 450 வருடங்கள் எடுக்கும் அத்துடன் தினமும் 7000 மெற்றிக்தொன் முகக்கவசங்களை மனிதர்கள் கழற்றி வீசுகிறார்கள்.*

*இவை clinical waste என்று வர்க்கப் படுத்தலில் வருவதால் Recycling குறித்து பெரிதாக எதுவும் செய்யப்படுவதில்லை. இந்த நிலையில் கடல் சார்ந்த சூழற்தொகுதிகளில் (Marine ecosystems) இதன் பாதிப்பு உச்ச நிலையை அடையும் நிச்சயமாக அது மனித இனத்தின் (food security) உணவுப் பாதுகாப்புக்கு இது பாரிய அச்சுறுத்தலை உருவாக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.* □

*குறிப்பு:2*

## யூரியா



*யூரியா தட்டுப்பாடு இலங்கையில் ஆட்சி அதிகாரத்தை துடைத்து எறியும் அளவிற்கு செல்வாக்கு செலுத்திய முக்கிய காரணிகளில் ஒன்று. நேபாளம் 550மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் ஆண்டுக்கு 700,000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் ஆற்றலுடைய யூரியா பாக்டரியை திறந்துள்ளார்கள். யூரியா தயாரிப்பு மூலப்பொருள் வளியில் உள்ள நைட்ரிஜன் பெற்றோலிய வாயுக்கள் அல்லது நப்தா (நமது சபுகஸ்கந்தையில் கழிவாக கிடைப்பது) Haber-Bosch process ஊடக ஹைட்ரஜன் பிரிக்கப்பட்டு உயர் வளிமண்டல அழுத்தத்தில் அமோனியா வாயுவை உருவாக்கி அது காபனீரொட்சைட்டுடன் கலக்கப்பட்டு Bosch–Meiser urea process மூலம் யூரியா தயாரிக்கப்படுகிறது.*

*இது மிகவும் சிக்கலான இரசாயன பொறிமுறையின் விளைவாகும். Physical Chemistryயில் பௌதீக விதிகளில் முக்கியமான லீச்சட்டலியர் விதியின் படி இந்த இயக்கம் சமநிலை யூரியா உருவாக்கத்தை விட அமோனியம் கார்பமேட் உருவாக்கத்தை ஊக்குவிப்பதால் மிகவும் கடுமையான வெப்பம் மற்றும் அழுத்த கட்டுப்பாடுகள் ஊடகவே யூரியா தயாரிக்கப்படுகிறது.*

*மிகவும் முட்டாள்தனமான யூரியா தடை காரணமாக இன்றைய விவசாய உற்பத்தி பாதிப்பில் இருந்து நாம் மீள வேண்டுமானால் நிச்சயமாக நேபாளம் போன்று தைரியமாக நாமும் முடிவெடுக்க வேண்டும். இலங்கையில் ஹம்பாந்தோட்டை இதற்கு மிகவும் பொருத்தமான இடம்.* □

*குறிப்பு:3*

# Non Resident Sri Lankan



*உண்மையை கூறுவதாக இருந்தால் எல்லா துறைகளிலும் இலங்கையில் உள்ள இலங்கையரை விட இலங்கைக்கு வெளியில் உலகில் ஏனைய நாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் சிறந்து விளங்குகின்றனர்.* Non Resident Sri Lankan *அல்லது* Diaspora *எப்படி வேண்டுமானாலும் பெயர் வைத்து கொள்ள முடியும். விஞ்ஞான, கலை, விளையாட்டு, வணிகம் அரசியல் உட்பட அனைத்து முக்கிய துறைகளிலும் அவர்களிடம்* global experience *உள்ளது அவர்களின் சிந்தனை* world class *தரமானது.*

NASA *நிறுவனத்தில் 2% இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர்கள் பணியாற்றுகின்றனர்.* Tesla *நிறுவனத்தில் ஆயிரக்கணக்கான இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர்கள் பணியாற்றுகின்றனர்.* Amazon *நிறுவனம் உரிமையாளர்* Jeff Bezo *இலங்கையை சேர்ந்த ஜீனியஸ் யசந்த ராஜகருணாநாயக* genius guy in Princeton university *என்று நினைவு கூர்ந்தார். மலேஷியா மிகவும் பெரிய பணக்காரர் ஆனந்த கிருஷ்ணன் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர்.*

*அண்மையில் இங்கிலாந்தில் புக்கர் பரிசை வென்ற செஹான் கருணாதிலக. இதற்கு முன்னர் புக்கர் பரிசை வென்ற மைக்கேல் ஒண்டாச்சி இவரது நாவல்* English Patient *என்ற ஹொலிவூட் பிளோக்பஸ்டராக மாறி பலநூறு மில்லியன் அமெரிக்க டாலர்களை வசூலித்தது. ஹெங்கொங் சீனாவின் மிகச் சிறந்த விஞ்ஞானி மலிக் பீரிஸ் சார்ஸ் வைரசை கண்டுபிடித்தவர் போல இன்னும் எத்தனை மில்லியன் திறமையான இலங்கை மக்கள் உதாரணமாக காட்டலாம்.*

*இவர்களில் பலர் வேறு நாடுகளுக்கு நிரந்தர குடியுரிமை பெற்ற போதும் இவர்களின் சிந்தையில் பல கசப்பான அனுபவங்களை தாண்டி நாடு குறித்து அக்கறை இருக்கும். இவ்வளவு வளமான நாடாக இருந்தும் எம்மால் இலங்கையை அபிவிருத்தி செய்ய முடியவில்லை என்று வேதனை இருக்கும்.*

*ஆகக் குறைந்தது இவர்களின் திறமையை இலங்கை பயன்படுத்த வேண்டும். இவர்களிடம் பல பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடாக திரட்டும் தகைமை உள்ளது மிகவும் வெளிப்படையான உண்மை. அத்துடன் இவர்கள் இலங்கையில் உள்ள சராசரி நபரை விட 25 மடங்கு* productive *ஆனவர்கள். சனத்தொகையில் 4%ஆன* NRSL *இலங்கையில் மொத்த தேசிய உற்பத்தியை விட அதிகமாக உற்பத்தி செய்யும் வினைத்திறன் மிக்கவர்கள்.*
*முறையாக பார்த்தல் இவர்கள் அனைவருக்கும் இலங்கை இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கினாலே இலங்கையில் பொருளாதார சிக்கல்களை இலகுவாக தீர்த்து விடலாம்.*

*ஆனால் நமது இனவாத அரசியல் கலாச்சாரம் இதற்கு அனுமதியாது. ஆகக் குறைந்தது இவர்களின் ஜனநாயக வாக்களிப்பு உரிமையை நாம் மதிக்கிறோமா? உலகில் எத்தனையோ நாடுகள்* Non Resident Citizens *அந்த நாட்டின் தூதரகங்களில் வாக்கு சாவடி அமைத்து வாக்களிக்க அனுமதி வழங்கியுள்ளன. இதெல்லாம் நமது நாட்டில் உள்ள பிற்போக்கு சிந்தனை அனுமதியாது.*

*கடைசியாக 22ஆவது திருத்தம் இதனால் திறைமையான* NRSL *இரட்டை பிரஜாவுரிமை உள்ள போதும் நாட்டை கட்டியெழுப்ப எந்த வாய்ப்பும் வழங்காமல் இருக்கிறோம்.* □

# இலங்கையில் பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வியல்

**பாகம்-12**



**ப்ரியமதா பயஸ்**

ஓடி ஓடி உழைக்கணும் என்பதெல்லாம் இப்போது எவ்வளவு சாத்தியம் என்று சொல்லமுடியவில்லை ஆனால் இலங்கையின் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வில் அது ஒன்றுமட்டும்தான் நடப்பதாகவே உணரமுடிகிறது. அண்மையில் ஒரு பெண்தலைமைத்துவ குடும்பம் ஒன்றை சந்திக்க நேர்ந்தது. போரில் எந்த பாதிப்பையும் சந்திக்காத குடும்பம். போரால்கூட கணவனை இழக்கவில்லை. ஒருவிபத்தில் அந்தப்பெண்ணின் கணவர் இறந்து போனார். உறவுகள் எல்லோரும் மிக வசதியாக இருக்கின்றனர். பல சகோதரர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றார்கள் அந்த பெண்ணுக்கு. ஆனால், தனது பெண் பிள்ளையுடன் மிக தவித்துப்போய் இருக்கின்றார் அந்த பெண். அவரின் கண்ணீரக் கதையை கேட்டதும் இது என்னடா கொடுமையான சமூகம் என்று என் சமூகத்தின்மீது எனக்கு கடும் கோபம் வந்தது.

விடயத்துக்கு வருகிறேன் 2017 ஆம் ஆண்டு ஒரு விபத்தில் கணவனை இழக்கிறாள் இந்த பெண். ஒரு பெண்குழந்தையோடு இளம்வயதில் அவள் விதவை ஆக்கப்படுகிறாள். க.பொ.த உயர்தரம்வரை கல்வி கற்றுள்ள அந்தப்பெண் முற்றும்முழுதாக தன் கணவனையே நம்பி வாழ்ந்த ஒருத்தி. கணவன் விபத்துக்கு உள்ளாகிவிட்டார் என்று அறிந்து வீதிக்கு ஓடி அங்கிருந்து அவரை மருத்துவமனை கொண்டுசென்று வீடுதிரும்பும்போது அவரது



மணிபேர்சுக்குள் இருந்த 850ரூபா பணம்தான் அந்த பெண்ணுக்கு கணவன் விட்டுச்சென்ற சொத்து.

மிகக் குறுகியகாலத்தில் வாழ்க்கைத் துணையை இழ்ந்தவளானாள். இத்தனை உறவுகள் இருந்தும், இத்தனை சொந்தங்கள் இருந்தும் இன்றும் நாதியற்று இருக்கும் அந்தப் பெண்ணின் குழந்தைக்கும் ஐந்துவயது கூடி இருக்கிறது. அவளுக்கு ஒரு மறுமணம் செய்துவைப்பதே எம் நோக்கமாக இருந்தமையால் அவளை சந்திக்கப் போயிருந்தேன் - ஒரு பெண் விதவை ஆகிவிட்டால் எத்தனை துன்பங்களைத் தாங்கவேண்டும்?
“சாதி மாறி விரும்பி அவரை கல்யாணம் செய்துகொண்டேன், என் குடும்பம் மிகவும் வசதியானது. எனது மூன்று சகோதரர்கள் வெளிநாட்டில் இருக்கின்றனர். நான் அவரை விரும்பித் திருமணம் செய்தமையால் என்னை குடும்பத்தில் யாரும் சேர்ப்பதில்லை. என் கணவர்

இறந்தபோதுகூட யாரும் உதவவும் இல்லை, யாரும் வரவும் இல்லை. நான் இன்று ஐந்து வருடங்களாக விதானையும், சமூர்த்தியும் அப்பப்போ உதவும் நல்ல உள்ளங்களாலும், தோட்டவேலைகளுக்குப் போவதாலும் காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்கின்றேன்" என்றாள்.

இந்த மாதிரியான இக்கட்டுக்குள் இருக்கும் ஒரு பெண்ணை குடும்பத்தினர் சாதியை காரணம் காட்டி ஒதுக்கியே வைத்துள்ளனர் என்பது எவ்வளவு கொடுமையான விடையம்?

நாளாந்தம் உணவுக்கும் கல்வித் தேவைக்கும் போராடும் அவளை எப்படி தேற்றுவதென்றே புரியவில்லை. உலகில் எல்லோரும் வாழ்கிறார்கள் என்பது இருக்க, வெளியே தெரியாமல் இருக்கும் இப்படியான சம்பவங்கள் மிக மோசமான பாதிப்புக்களை சமூகத்தில் ஏற்படுத்துகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. காலம்காலமாக நாம் பேணிப்பாதுகாக்கின்ற சமூக ஒற்றுமை இப்படி ஒரு சிலரின் வன்மத்தினால், ஒரு சிலர் செய்கின்ற பிழைகளால் ஒரு சமூகத்தை எவ்வளவுக்கு பாதிக்கின்றது என்று எழுத்தில் எழுதிவிடமுடியாது.

நாளாந்தம் தோட்டவேலைக்குப் போவது, பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்புவது, மருத்துவம், உணவு ஏனைய தேவை, சமூக பாதுகாப்பு என்று தனித்து வாழும் ஒரு பெண்ணைச் சுற்றி ஏராளமான சுமைகள் குவிந்து கிடக்கிறது.

இத்தனையையும் தாண்டி ஒரு பெண் இந்த சமூகத்துக்குள் வாழத் துணிகின்றாள் என்றால் அது சாதனைதான் என்பதுபோல தோன்றுகின்றது.

இப்போது இலங்கையில் 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த பாதுகாப்பு இல்லை. ஒரு பெண் தனிமையில் வாழ்வது என்பதும் சமூக விஷமிகளால் பெரும் தலையிடியைக்கொடுக்கும் செயல்களைத் தாண்டுவது என்பதும் மகா பயங்கரமானது.

எதிர்த்து ஒரு வார்த்தை பேசிவிட்டால் இரவோடு இரவாக வாளுகளுடன் வீட்டுக்குள் புகுவது, கடத்தல், கொலை, கொள்ளை என மகா பயங்கரங்களைச் செய்வதும் சர்வசாதாரணமாகிவிட்டது.

பெண்கள் பாதுகாப்பாய் வாழ்ந்த அந்தக் காலம்போய் இந்தக்காலம் வாழ்வது மிக கடினமாகிவிட்டது. வயதுமுதிர்ந்த பெண்ணோ, குழந்தையோ, இளம்பெண்ணோ சமூகத்தில் தனிமையில் நடமாடமுடியாது. தனித்து இருக்கமுடியாது கூட்டுக்குடும்பமாக அண்ணன், தம்பி, அக்கா, அத்தான் என கும்பலாக வாழ்வதே பாதுகாப்பாகிப் போயிருக்கிறது. அப்படி உறவுகள் இல்லாத பெண்கள் தனிமையில் வாழ்வது சவாலில் சவாலாக இருக்கின்றது.

போதைவஸ்து பாவனையும், விபத்துக்களும் ஆண்களை அபரிமிதமாக காவுகொள்கின்றது இதனால் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டு தனித்து போவது அதிகரிக்கின்றது. இவர்களைக் கண்டுகொள்ளாத உறவுகளும் சமூகமும் நவீனம் என்ற காலத்தை நோக்கிப் போவது என்பது எவ்வளவு அபத்தமானது. எத்தனை வீரம் இருந்தாலும் மனதைரியம் இருந்தாலும் தன்னிலை மறந்த சமூகத்துக்குள் தனித்துவாழ்வது எவ்வளவு கடினம் என்பதை ஒவ்வொரு விதவைப் பெண்ணும் சொல்கிறாள். அது கேட்கும் தருணம்தோறும் மன வலியை அதிகரிக்கின்றது.




தோட்டங்கள், வயல்கள், தெருக்கள், பணியிடங்கள், கடற்கரைகள் என அனைத்து இடங்களிலும் விதவைகள் சென்றுவருவதென்பது மிகப் பரிதாபமான நிலைமையாகும். சிலபெண்கள் துணிச்சலாக கடலுக்குள் இறங்கி மீன்பிடிக்கவும் செய்கின்றனர்.

தோட்டங்களில் முற்று முழுதாக பாதிக்கப்பட்ட பெண்தலைமைத்துவக் குடும்பங்களே பாடுபடுகின்றனர். கன்று நடுதல் சாருதல், களை எடுத்தல், நீர்பாச்சுதல் என அனைத்து வேலைகளையும் அத்துப்படியாக மிக நேர்த்தியாக அவர்களே செய்கின்றனர். இது ஒருபுறம் நல்ல செய்தியாக இருந்தாலும் வாழ்விழந்தவர்களுக்கு வேறு வழி இல்லை என்பதும் மிக கொடுமையான நிலைதான்.

தொடரும்...

# கிராஞ்சி இலவங்குடா மீனவர் தொடர் போராட்டம்



பூநகரி, கிராஞ்சி இலவங்குடா கரையோர சிறுதொழில் மீனவர்கள் ஏறத்தாழ அரை நூற்றாண்டாக பாரம்பரியமாக சிறகுவலை மீன்பிடி முறைமையினை செய்து வருகின்றனர்.
அதேபோல் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த 60 வரையான பெண்கள் குறிப்பாக, மேற்படி கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் நண்டு, இறால், மீன், அட்டை, போன்றவற்றினைப் பிடித்து தமது அன்றாட வாழ்வாதாரத்தை நிவர்த்தி செய்து வருகின்றனர்.

தவிரவும், தற்போது அட்டைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் கடற் தாவரங்கள் அதிகம் காணப்படுகின்றன. அந்தக் களக்கடல் பிரதேசம் கடல்வாழ் உயிரிகள் இரை பிடிப்பதும், நிரந்தர வாழ்விடமாகக் கொள்வதும், இனப்பெருக்கம் செய்வதுமான இடங்களாகும்.

இவ்விடங்களில் பண்ணைகள் அமைக்கப்பட்டதால் மீனினங்களுக்கும் கரைக்குமான தொடர்பு தடுக்கப்பட்டுள்ளதோடு, இந்தக் களக்கடற் பரப்புகளில் பசுமையாக விளைந்துள்ள கடற்தாவரங்களை முற்றுமுழுதாக அழிப்பதுமாகும். மேலும் இரவு நேரங்களில் அதிகூடிய வெளிச்சமுள்ள மின்விளக்குகளை



அட்டைப்பண்ணைக் கண்காணிப்புக்காகப் பொருத்தப்பட்டுள்ளதால் மீன்கள் கரையை நோக்கி உணவு தேடி வரமுடியாத நிலையும், தொடர்ந்து இந்த நிலை நீடிக்குமாக இருந்தால் இந்தக் கரைகளை எந்தவகை கடல் உயிரிகளும் அண்டாது என்பதும் சாதாரணமான புரிதலாகும்.

இதன் காரணமாக அப்பகுதியில் தொழில் செய்யும் அனைத்து மீனவர்களின் அன்றாட வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடற்றொழிலாளர் சங்கம், கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களம், பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் காரியாலயம் ஆகியோருக்கு பலமுறை கடிதம் மூலமாக இந்த மக்களும், பெண்தலைமைக் குடும்பங்களுக்கான




அமைப்புக்களும் தெரிவித்திருந்தும்கூட எந்தவிதமான முன்னேற்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவில்லை. தீர்வுகளும் கிடைக்கவில்லை.

தவிரவும் உள்ளூர் மீனவர்களின் சிறு தோணிகள் தரித்து வைக்கப்படும் துறைமுகங்களையும் இவர்கள் ஆக்கிரமித்து பண்ணைகளை அமைத்து வருகிறார்கள். இந்த மக்கள் தொழில் புரியும் பகுதிகளிலும் துறைமுகங்களிலும் பண்ணை அமைந்திருப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

கிராஞ்சியில் தமது வாழ்வாதாரங்களுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் பெண் தலைமைக் குடும்பங்களின் அமைப்பு கடந்த ஒருமாத காலமாக தொடர் சாத்வீகப் போராட்டத்தை நடாத்தி வருவது மட்டுமல்லாமல், இலங்கை வடபிராந்திய மனித உரிமை ஆணையத்திலும் இது தொடர்பாக வழக்குத் தொடர்ந்தார்கள்.

கடந்த 27.10.2022இல் மேற்படி புகார் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைய நீதி மன்றில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் தீர்ப்பாயமாக "கிராஞ்சி இலவன்குடாவில் அமைக்கப்பட்ட பண்ணைகள் சட்டவிரோதமானவை" என ஏற்றுக் கொள்ளப்பட்டது.
இந்த அட்டைப் பண்ணைகளை முன் நின்று மேற்கொண்ட அரச திணைக்களங்களான Naqda, Nara ஆகியவை ஒரு வாரத்தில் இதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதாக வாக்களித்திருக்கின்றனர்.

தவிரவும், 28.10.2022 அன்று கடற்தொழில் அமைச்சர்



டக்ளஸ் தேவானந்தா வடக்கில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகள் தொடர்பாக சிலரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்தி, மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்துள்ளதோடு, குறித்த விசாரணை சில விடயங்களை தனக்கு உணர்த்தியுள்ளதாகவும், உரிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு எந்தவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளாது, இலங்கை கடற் பரப்பில் தன்னிச்சையாக அமைக்கப்பட்டுள்ள பட்டி வலைகள், கடலட்டைப் பண்ணைகள் போன்ற அனைத்தும் அகற்றப்பட்டு, அனைத்து தொழில் செயற்பாடுகளையும் உரிய நியமங்களுக்கு அமைய ஒழுங்குபடுத்த தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

**-பானுபாரதி-**

# தமிழர்களின் நாட்டுப்புறக்கலை நிகழ்ச்சியும் சிறுவர்களுக்கான கதை கூறலும்

யூலியஸ் அன்ரனி



நோர்வே திருமறைக்கலா மன்றத்தின் ஏற்பாட்டில் நோர்வே பேர்கன் இலக்கியக் கழகத்தின் ஆதரவில் 01.oktober 2022 இல் இலக்கிய வளாகத்தில் (Bergen Litteratur huset) கலை இலக்கிய நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஏராளமான நோர்வேயிய மக்களும், சிறுவர்களும், தமிழ் மக்களும் மண்டபத்தை நிறைத்திருந்தனர்.

குறிக்கப்பட்ட நேரத்தில் இலக்கிய வளாக பொறுப்பாளர் Heidi Bøhagen மக்களை வரவேற்க,




இன்பன்ரா யூலியஸ் நிகழ்ச்சித் தொகுப்பாளராக தோன்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்தார்.



நோர்வேயிய மக்களுக்கு உரிய வகையில் அனைத்து நிகழ்ச்சிகளும் நோர்வேயிய மொழியிலேயே விளக்கம் கொடுக்கப்பட்டது. முற்றிலும் நோர்வேயியநாட்டுமக்களுக்கான நிகழ்ச்சியாகவே திகழ்ந்தன.
ஆரம்ப நிகழ்வாக தமிழ் நாட்டுப்புற கலைவடிவங்களான நாட்டுப்புற நடனங்களும், நாட்டுப்புறப் பாடல்களும் அரங்கேறின.





நாட்டிய கலாயோதி பியங்கா எல்மர் மற்றும் சங்கீத கலாரெத்தினம் பூஜா சுரேஷ் ஆகிய இளையோர் முன்னின்று பல சிறுவர்களைக் கொண்டு நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர்.

தொடர்ந்து பாலர் கூட ஆசிரியை ஜெனிற்ரா சங்கர் அவர்கள் விசித்திரக் கதை ஒன்றினை நோர்வேயிய மொழியில் எடுத்துரைத்தார்.

சிறுவர்கள் அனைவரும் மிகவும் ஆர்வமாக அக்கதையினை உள்வாங்கி, அக்கதையின் முக்கிய விடயங்கள் பற்றி மழலை மொழியில் உரையாடலையும் நடத்தினர்.

இறுதியில் சிறுவர்கள் தாம் உள்வாங்கிய விடயங்களை சித்திரமாய் தாள்களில் வரைந்தமையும், அதற்கான விளக்கங்களை ஆசிரியை ஜெனிற்றாவிடம் பகிர்ந்தமையும் மெய்சிலிர்க்க வைத்தது.

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குனரான காலம்சென்ற அருட்தந்தை நீ.மரிய சேவியர் அடிகளாரின் "பிற நாட்டு மக்களிடம் எமது கலையினை பகிர வேண்டும்" என்ற ஆவல் இந்த இலக்கிய அரங்கிலும் நிகழ்ந்துள்ளது என்றே எண்ணத்தோன்றுகிறது.

இவ்வாறான நிகழ்வுகள் தொடர எமது வாழ்த்துக்கள்.




EA 6år






Saga 7år

Oline 8år




Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN 2703-8440
VIPS: 729129 - Konto: 3626 31 78585